CC 446/2019

24.02.2026

பு.சா.1,

பெயர்: செந்தில்

த/பெ. வெங்கடாச்சலம்

பு.சா.1 MP No.9/2026-ன் கீழ் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused Present. Accused counsel present.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பு.சா.ஆ.7 ஆவணம் நகல் என்றால் சரிதான், அதன் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் மேற்படி ஆவணத்தினை நான் இதற்கு முன்னர் இருந்த வழக்கறிஞரிடம் கொடுத்தேன். பு.சா.ஆ.7 ஆவணம் இரண்டு கார்பன் சீட் வைத்து எழுதப்படும் ஆவணமாகும். பு.சா.ஆ.7 முதல் தாள் வெள்ளை கலரிலும், மற்ற இரண்டு தாள்கள் என்ன நிறம் என்று தற்சமயம் ஞாபகமில்லை. பு.சா.ஆ.7 ஆவணம் கடனுக்காக கொடுத்த ஆவணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் Invoice Credit என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

விலைப்பட்டியல் கேட்டால் பு.சா.ஆ.7 ஆவணத்தைதான் கொடுப்பேன் என்றால் சரியல்ல, நாங்கள் வேறு ஆவணங்கள் கொடுப்போம். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும், கடனுக்காக கொடுத்திருந்தால் Invoice ஐ அடித்துவிட்டு, Credit என்று குறித்து கொடுத்திருப்பேன் என்றாலும் சரியல்ல. ஒரு சிப்பத்திற்கு 40 – 45 கிலோ மிளகாய் வற்றல் இருக்கும். மாட்டு வண்டியில் குறைந்த பட்சம் 30 சிப்பம் தருவோம். பு.சா.ஆ.7 ஆவணத்தில் 65 கிலோ சிப்பம் அனுப்பியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், மேற்படி சரக்கினை இரண்டு மாட்டு வண்டிகளில் அனுப்பினேன், இரண்டு மாட்டு வண்டிகளுக்கும் ஒரே இன்வாய்ஸ்தான் கொடுத்துள்ளோம்.

புகாரிலும் பிரமாண வாக்குமூலத்திலும் இரண்டு மாட்டு வண்டிகளில் சரக்கு அனுப்பிய விவரங்களை கூறவில்லையென்றால் சரிதான். மாட்டு வண்டிகள் குறித்து எந்த வழக்கிலும் நான் குறிப்பிடவில்லை. உண்மையிலேயே எதிரி என்னிடம் 65 கிலோ சிப்பம் வாங்கியிருந்தால் நான் மாட்டு வண்டியில் அனுப்பியது குறித்து குறிப்பிட்டிருப்பேன் என்றாலும், அவ்வாறு அனுப்பாத காரணத்தால் குறிப்பிடவில்லையென்றால் சரியல்ல.

தற்போது என்முன் காட்டப்படும் விலைப்பட்டியல்கள் எங்களது நிறுவனத்திலிருந்து எதிரிக்கு கொடுத்த விலைப்பட்டியல்கள் என்றால் சரிதான். அவைகள் முறையே 12.12.2016 ம் தேதியிட்ட எதிரி, நிறுவனத்திற்கு அனுப்பிய விலைப்பட்டியல் **எ.ம.சா.ஆ.1,** 25.12.2016 ம் தேதியிட்ட எதிரி, நிறுவனத்திற்கு அனுப்பிய விலைப்பட்டியல் **எ.ம.சா.ஆ.2** ஆகும். எ.ம.சா.ஆ.1 ல் 40 மூட்டை அனுப்பியுள்ளதாக கூறியுள்ளோம் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.1 ல் எதன் மூலம் அனுப்பப்பட்டுள்ளது என்ற விவரம் இல்லையென்றால் சரிதான். எ.ம.சா.ஆ.2 ல் 11 மூட்டை அனுப்பியுள்ளதாக கூறியுள்ளோம் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.2 ல் மாட்டு வண்டி என்று தமிழில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பு.சா.ஆ.7 ஆவணத்தில் எதிரி கையொப்பமிட்டு வாங்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், எ.ம.சா.ஆ.2 ல் அவ்வாறு குறிப்பிடவில்லையென்றால் சரிதான். உண்மையிலேயே எதிரிக்கு சரக்கு அனுப்பியிருந்தால் எ.ம.சா.ஆ.2 ல் குறிப்பிட்டுள்ளது போல் பு.சா.ஆ.7 லும் குறிப்பிட்டிருப்பேன் என்றாலும் அவ்வாறு சரக்கு அனுப்பாத காரணத்தால் குறிப்பிடவில்லையென்றால் சரியல்ல, வழக்கிற்காக பு.சா.ஆ.7 ஐ பொய்யாக தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

பு.சா.ஆ.7 ல் உள்ள கையெழுத்து எதிரியுடையது அல்ல என்றாலும், வழக்கு காசோலைகளில் உள்ள கையெழுத்தையும், பு.சா.ஆ.7 ல் உள்ள கையெழுத்தையும் தடயவியல் துறைக்கு அனுப்பினால் உண்மை தெரியவரும் என்றால் சரியல்ல. தடயவியல் சோதனைக்கு அனுப்ப எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லையென்றால் சரிதான். எதிரி இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே அவரது வங்கிக்கு காசோலைகள் காணவில்லையென தகவல் தெரிவித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

எதிரி புகாரில் கூறியுள்ள தேதியில் என்னிடம் பொருட்கள் வாங்கவில்லையென்றாலும், அதற்கு ஆதரவாக காசோலைகள் எதையும் என்னிடம் கொடுக்கவில்லையென்றாலும், எதிரியிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. VAT Period ல் நடந்த பரிவர்த்தனைக்கு GST Period ல் மாதாந்திர அறிக்கை அரசுக்கு சமர்ப்பித்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் முறையாக அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளேன். உண்மையிலேயே பொருட்கள் வாங்கியிருந்தால் அசல் கடன் இரசீதினை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

19.07.2017 ம் தேதியிட்ட Commercial Tax Acknowledgment Receipt நான் எங்களது நிறுவனத்திற்காக தாக்கல் செய்துள்ளேன். அது **பு.சா.ஆ.8** ஆகும்.

**குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கு இணங்க சாட்சியின் குறுக்கு விசாரணை 03.03.2026 ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.